**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C. 27/2003**
**Deposition of witness for prosecution -PW-4**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பிரசன்னா |
| Father Name | : | திரு.மரியமைக்கேல் என்ற பெருமாள் |
| Village | : | நாகர்கோவில் |
| Taluk | : | நாகர்கோவில் |
| Calling | : | காவல் துணை கண்காணிப்பாளர் ஓய்வு |
| Religion | : | கிறித்தவர் |
| Age | : | 67 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 6th day of December 2022.

முதல் விசாரணை:

நான் கடந்த 2011ம் வருடம் காவல் துறையில் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்று தற்போது நாகர்கோவிலில் வசித்து வருகிறேன். நான் 2001ம் வருடம் இராமநாதபுரம் வணிகவியல் குற்ற புலனாய்வு பிரிவில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது 09.02.2001ம் தேதி இராமநாதபுரம் துணை பதிவாளர் கொடுத்த புகார் மனுவை காவல் கண்காணிப்பாளர், வணிக குற்ற புலனாய்வு அவர்களிடமிருந்து வரப்பெற்ற தபாலை பெற்று தபாலில் இருந்த புகாரின் தன்மைக்கேற்ப குற்ற எண். 6/2001 சட்டப்பிரிவுகள் 408 r/w 34 இதசவின்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.18 ஆகும். வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் சேதுராமன் துணைபதிவாளர், இராமநாதபுரம், அய்யங்காளை விரிவாக்க அலுவலர் ஆர்.எஸ்.மங்கலம், திரு.தேவதாஸ்காந்தி கூடுதல் பதிவாளர், தனி அலுவலர், தமிழ்நாடு கூட்டுறவு மார்க்கெட்டிங் பெடரேசன், செயின்ட் தாமஸ் மவுண்ட் சென்னை, திரு.வசந்தசேகரன் கூட்டுறவு தணிக்கையாளர், உதவி இயக்குநர் அலுவலகம், இராமநாதபுரம், அந்தோணி ஜோசப் உதவி இயக்குநர் ஓய்வு, கூட்டுறவு தணிக்கை இராமநாதபுரம், அனந்த குமரேசன், துணை பதிவாளர் ஓய்வு, இராமநாதபுரம், பால்பண்டாரம், துணை பதிவாளர் இராமநாதபுரம் ஆகியோர்களை தனி தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு

செய்தேன். என்னுடைய விசாரணையை எதிரிகளின் குற்ற செயலானது பிரிவுகள் 408, 420 r/w 34 இதசவின் கீழ் குற்றப்பத்திரிக்கை பதிவு செய்யலாம் என்று விசாரணையில் தெரியவந்ததால் இத்துடன் இந்த வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 408, 420 r/w 34 இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். குற்ற இறுதி அறிக்கையுடன் சம்மந்தப்பட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். 30.07.1994 முதல் 31.07.1996 வரையிலான சேல்ஸ்மேன் Pay Bill புத்தகம் அ.த.சா.ஆ.19 ஆகும். டிசம்பர் 1992 முதல் 26.07.1994 வரையிலான சேல்ஸ்மேன் Pay Bill புத்தகம் அ.த.சா.ஆ.20 ஆகும். திருவாடானை வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்குட்பட்ட ராஜசிங்கமங்கலம் துணை விதி புத்தகத்தின் பக்கம் 41-ஆனது ஏற்கெனவே அ.த.சா.ஆ.15-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1994-1995 வருட நியாயவிலைக் கடைகளின் பொறுப்பு பதிவேடு அ.த.சா.ஆ.21 ஆகும். 1993-1994 பொறுப்பு பதிவேடு அ.த.சா.ஆ.22 ஆகும். விசாரணை அதிகாரி விஜயகுமார், தர்மராஜ், பாலமுருகன், அறிவழகன், தினகரன் ஆகியோர்களை விசாரித்த வாக்குமூலங்கள் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்ட எதிரிகளுக்கு அனுப்பிய அழைப்பாணைகள் அடங்கிய கோப்பு அ.த.சா.ஆ.23 ஆகும்.

**1, 3, 4, 5, 6, 7, 8 எதிரிகள் தரப்பில் கு.வி**

இந்த வழக்கின் விசாரணைக்குரிய ஆவணங்களை கூட்டுறவு சங்க அலுவலர்கள் வாங்கி என்னிடம் ஒப்படைத்தார்கள் என்றால் சரிதான். கூட்டுறவு சங்க பிரிவி 81ன் அறிக்கையை விசாரணை அதிகாரி என்னிடம் வழங்கினாரா என்றால் ஆமாம். அந்த ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் விசாரணை செய்தேனா என்றால் சரிதான். மேலும் சாட்சிகளையும் விசாரணை செய்தேன். சாட்சிகள் விசாரணை என்பது என்னிடம் கொடுத்த ஆவணங்களின் அடிப்படையிலானது என்றால் சரிதான். என்னுடைய புலன் விசாரணையில் இந்த வழக்கின் ஆவணங்கள் எதையும் புதிதாக கண்டுபிடிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் கூட்டுறவு சங்க அதிகாரிகள் என்னிடம் கொடுத்த ஆவணங்களை நான் சரிவர ஆய்வு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் விசாரித்ததாக சொல்லப்படும் சாட்சிகளின் வாக்குமூலங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்கேற்றவாறு நானே எழுதிக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் மேற்கொண்ட புலன் விசாரணையில் ஆவணங்களை மனதில்

செலுத்தாமல், மேலோட்டமாக பார்த்து அதற்கேற்றாற்போல் வாக்குமூலங்களை தயார் செய்து கொண்டு எதிரிகள் மீது தவறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னால் கூறப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கும், எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**9 வது எதிரி தரப்பில் கு.வி**

எதிரி தினகரன் என்பவரை பொறுத்த அளவில் அவர் மேலாளர் என்ற அடிப்படையில் தினசரி நடவடிக்கைகளை கவனிக்க தவறி விட்டார் என்பது தான் குற்றச்சாட்டா என்றால் இல்லை. கூட்டுறவு சங்கத்தில் விற்பனையாளர்கள் செலுத்திய தொகைகளை வங்கியில் முறையாக செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தப்பட்டதா இல்லையா என்று அவர் கண்டுபிடித்து அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு எடுக்கவில்லை என்பது தான் அவர்மீது உள்ள குற்றச்சாட்டு. எதிரி தினகரன் தினசரி மற்ற எதிரிகளின் கடைகளை கண்காணிக்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. தேவைப்படும்போது சென்று அந்த கடைகளை கண்காணிக்க வேண்டும். விற்பனையாளர்கள் அனைவரும் தொகையை நேரடியாக வங்கியில் இருசால் செய்ய வேண்டும் என்றால் சரிதான். மேலாளராக எதிரி தினகரன் பணிபுரிந்தது தலைமை அலுவலகமான ஆர்.எஸ்.மங்கலத்தில் என்றால் சரிதான். அங்கிருந்த 8 கடைகளும் சுமார் 45 கி.மீ சுற்றளவில் உள்ளது என்றால் இல்லை. சுமார் 20, 25 கி.மீ தூரத்தில் உள்ள கடைகள். எதிரி தினகரன் அவ்வப்போது மேற்சொன்ன கடைகளை கண்காணிக்க சென்றதற்கான வாகனப்படி ஏதேனும் பெற்றாராஎன்று என்னுடைய விசாரணையில் ஏதாவது ஆவணங்களை நான் பார்வையிட்டேனா என்றால் இல்லை. வாகனப்படி ஆவணம் ஆர்.எஸ்.மங்கலம் கூட்டுறவு சங்கத்தில் உள்ளது என்றால் அதனை பார்த்தால் தான் கூற முடியும். அந்த சொசைட்டியில் தனி அலுவலர் என்ற ஒரு பதவி உள்ளதா என்றால் அந்த நேரத்தில் தனி அலுவலர் பதவி இல்லை. எதிரி தினகரன் மேலாளர் என்ற முறையில் அவருக்கான பொறுப்பும், கடமைகளும் அந்த கூட்டுறவு சங்கத்தில் நிறைவேற்றப்பட்டிருந்ததா என்றால் நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்த வழக்கில் தினரகனுக்கு பொறுப்பும் கடமைகளும் என்னவென்று ஆவணங்களை நான் பார்வையிட்டேனா என்றால் பார்த்தேன். 31.07.1992 ம் வருடம் சலிம் என்ற தனி

அலுவலர், மேலாளருக்கு பொறுப்பும், கடமையும் நிறைவேற்றி தனி தீர்மானம் போடப்பட்டது. எதிரி தரப்பு சான்றாவணம் 1-ஆக அ.சா.3ன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அது குறித்து விவரம் எனக்கு தெரியாது. 29.12.1993ம்வருடம் விஜயகுமார் என்ற தனிஅலுவலர், மேலாளருக்கு பொறுப்பும், கடமையும் குறித்து தீர்மானம் நிறைவேற்றி உள்ளார். அது எதிரி தரப்பு சான்றாவணம்.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் இந்த வழக்கிற்குண்டான ஆவணங்கள் அனைத்தும் நான் பார்வையிட்டு தான் தாக்கல் செய்தேன். தற்போது இந்த வழக்கு நடந்து 20 வருடங்கள் ஆனதால் அது குறித்து தற்போது சரியாக ஞாபகமில்லை. இந்த வழக்கில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலமானது சுமார் 1993 முதல் 1999 வருடம் வரை ஆகும். இந்த வழக்கில் புகார் எப்போது கொடுக்கப்பட்டது என்றால் 2001 ல் கொடுக்கப்பட்டது. எதிரி தரப்பு சான்றாவணம் 2-ஆனது 29.12.1993 என்றால் சரிதான். 29.12.1993ல் தனிஅலுவலர் விஜயகுமார் என்ற நபர் பணிபுரிந்து அந்த அலுவலக உத்தரவை போட்டுள்ளார் என்றால் துல்லியமான பதில் என்னால் சொல்ல முடியாது. தனிஅலுவலர் விஜயகுமார் என்பவரை இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளீர்களா என்றால் நான் விசாரணை செய்து சாட்சியாக சேர்க்கவில்லை. தனிஅலுவலர் விஜயகுமார் என்பவர் எதிரி தினகரன் என்பவருக்கு போடப்பட்ட பொறுப்புகள், கடமைகள் இரண்டிலிருந்து தன்னை நீக்க வேண்டும் என்று ஒரு கடிதம் கொடுத்து அதன் அடிப்படையில் அந்த தனி அலுவலர் 6 மற்றும் 8வது பொறுப்புகளை நீக்கி உள்ளார் என்றால் சரிதான். எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களின்படி கடைகளை கண்காணிக்கும் பணி, முறைகேடுகள் எதாவது இருந்தால் அதனை தெரிவிக்க வேண்டிய பொறுப்பு இல்லை என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலாளர் என்பவர் தனி அலுவலரிடம் தான் எந்த குறைகள் இருந்தாலும் கூறவேண்டும், அவர் தான் கூட்டுறவு சங்கத்திற்கு பொறுப்பு என்றால் சரிதான். கூட்டுறவு சங்கத்தின் தனிஅலுவலர் யார் என்று நான் எந்த புலன் விசாரணையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரி தினகரன் விற்பனையாளர்களை பொறுத்த அளவில் எந்தவிதமான பொறுப்பும் இல்லை என்று எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. 20.09.1993 தேதியிட்ட இராமநாதபுரம் கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் நியாயவிலைக்கடைகளை ஆய்வு செய்வது சம்மந்தமாக எல்லா கூட்டுறவு சங்கங்களுக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பினார். அது

எதிரி தரப்பு சான்றாவணம் 5-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. கூட்டுறவு சங்கத்தை பொறுத்தவரையில் ஒரு தனி அலுவலர் தான் முழு பொறுப்பு என்றால் சரிதான். தனி அலுவலர் தான் பொறுப்பு என்ற அளவில் மேலாளர் தினகரன் என்பவருக்கு பொறுப்பு இல்லை என்று தெரிந்தும், அவரை இந்த வழக்கில் ஒரு எதிரியாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பிரிவு 81 அறிக்கையானது 2 அறிக்கையாக பெறப்பட்டுள்ளது என்றால் அது குறித்து தற்போது ஞாபகமில்லை. அந்த அறிக்கையானது 19.08.1996 ல் ஆரம்பித்து 1998 ல் இரண்டு வருடம் கழித்து அந்த அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது குறித்து தற்போது ஞாபகமில்லை. பிரிவு 81 விசாரணையானது 3 மாத காலத்திற்குள் விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு 3 மாத காலத்திற்குள் முடிக்கவில்லை என்றால் மீண்டும் காலநீட்டிப்பு கொடுத்து மனு கொடுக்கலாம். அவ்வாறு விசாரணை அதிகாரி அய்யங்காளை என்பவர் காலநீட்டிப்பு கேட்டு கொடுத்த ஆவணத்தை நான் பார்வையிட்டேனா என்றால் இல்லை. அரசு தரப்பு சான்றாவணம் 15-யை நான் பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். அதில் மேலாளரை பற்றி எந்த விசயமும் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரிவு 81 ன்கீழ் ஒரு விசாரணை அதிகாரி விசாரித்த விசாரணை அறிக்கையின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட புகாரை பெற்று அதனை நான் விசாரணை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் தான் என்னை புலன் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்படுகிறார்கள் என்றால் ஆமாம். 81 விசாரணை அறிக்கையும், மற்ற ஆவணங்களையும் நான் சரிவர பரிசீலனை செய்யாமல் எதிரியின் மீது பொய்யான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த முறைகேடுகளுக்கும், எதிரி தினகரன் என்பவருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

(ஒப்பம்/- எம். சிட்டிபாபு)

நீதித்துறை நடுவர் எண்.1
இராமநாதபுரம்